Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள் சங்.129:1 ஆகஸ்ட் 2017 No.8

மரித்துக் கொண்டிருக்கும் உலகை இரட்சிக்க தெய்வீக வல்லமையால் நிரப்பப்பட்ட ஒரு சபை

A divinely empowered church to save a dying world

Fred. D. Jarvis

நமது இருதயங்களை ஆராய்ந்து, நமது வழிகளைப் பரிசோதிக்க வேண்டிய காலம் இது. சன்மார்க்க, ஆவிக்குரிய வல்லமை குன்றி விட்ட காலம். தேவன் தமது பிள்ளைகளை திடனாகவும், மேற்கொள்பவர்களாகவும் அழைத்தாலும் அவர்கள் ஆவிக்குரிய நிலையில் காயப்பட்டவர்களாயிருக்கின்றனர்.

இரட்சிக்கப்பட்டவர்களை விட, இரட்சிக்கப்பட வேண்டியவர்கள் அதிகமாயிருக்கின்றனர். நம்மைச் சுற்றிலுமுள்ள ஆவிக்குரிய வீழ்ச்சியும் ஆதரவற்ற நிலையும் சவாலாய் எடுக்கப்பட வேண்டும். இழந்து போன வல்லமையின் இரகசியத்தை மறுபடியும் பெற வேண்டும். குளிர்ந்த சடங்காசாரங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக் குறைவு, மரித்துப் போன மார்க்க நெறி ஆகியவற்றால் சாபமடைந்திருக்கிறோம்.

எழுப்புதல் மிகவும் தேவையான காலம் இது! ஆத்துமாக்கள் மீது அதிக பாரமுடைய மக்களே இந்த சூழ் நிலையை மாற்றி அமைக்க முடியும்.

உத்தமமும், ஆழமான ஆவிக்குரிய வாழ்வுமுடைய கிறிஸ்தவர்கள் மிகச்சிலரே. முதிர்ச்சியின் அடையாளமே இல்லை. எனவே விசுவாசத்தின் புதிய தீவிரமும் ஆழமான பக்தி நிலையும் தேவை.

அடிக்கடி நாம் நமது செய்திகளை மென்மையாக்கி நமது அந்தஸ்தையும் குறைத்து விடுகிறோம். நாம் உலகத்தோடு நம்மை அதிகமாக தகவமைத்துக் கொள்வதால் உலகத்தோடு ஊறிப்போய் விட்டோம். உலகத்தை விட்டுப் பிரிந்து வாழ கிறிஸ்துவோடுள்ள நெருக்கமே ஒரேவழி. தேவன் நமது வாழ்வின் முதற் கனிகளை விரும்புகிறார்.

இருதயக்தில் அதமாகுதலும், பாதங்களில் முன்னேற்றமும்

இந்நாட்களின் நெருக்கடியை சந்திக்க ஆதித்திருச்சபையின் அக்கினி அனுபவமும், உற்சாகமும் நமக்கு தேவனால் அருளப்படுவதாக. இது சுவிசேஷத்தை அவசரமாக அறிவிக்க வேண்டிய சமயம். நமது பொருத்தமான சுவிசேஷம் மட்டுமே, இழந்து போனதும் தடுமாறிக் கொண்டிருப்பதுமான உலகிற்கு ஒரே பதிலாயிருக்கிறது.

சுவிசேஷம் ஒரு மனிதனின் வாழ்வில் உள்ளும், புறம்பும் முழுமையான வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்க திட்டங்களையும், ஒப்பந்தங்களையும் பயன்படுத்தவில்லை. அவர்களிடம் அறிவிக்க ஜீவனுள்ள ஆண்டவர் இருந்தார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மிஷனெரி என்பதும் கிறிஸ்துவற்ற ஒவ்வொரு இருதயமும் ஒரு மிஷனெரி களம் என்பதும் அவர்களது எண்ணமாயிருந்தது. அவர்கள் இருதயத்தில் ஐயோ என்ற எண்ணமும் கால்களில் நடையுமிருந்தது. ஆதித்திருச்சபையில் எதுவும் தற்செயலானதாக இருக்கவில்லை. அவர்கள் உலகத்தைத் தலை கீழாக மாற்றி விட்டனர். அவர்கள் பிரசங்கித்த சத்தியத்தைக் கைக் கொண்டு நடந்தனர்.

தங்களை இழக்கக் கொடுக்கிறவர்கள் மட்டுமே உலகத்தை இரட்சிக்க முடியும். கிறிஸ்தவர்கள் ஜீவனைக் கொடுக்க விரும்பினால் மட்டுமே இழந்து போனவர்கள் ஜீவன் பெற முடியும். நாம் கிறிஸ்துவைப் போல காணப்படாவிட்டால் உலகத்தை நாம் ஆதாயப்படுத்த முடியாது. அரைமனதுடைய கிறிஸ்தவர்களுக்கும் முழு மனதோடு கூடிய கிறிஸ்தவர்களுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. நல்லவர்களை அதிக நல்லவர்களாக்குவது சுவிசேஷமல்ல. இதற்கு மிகவும் சக்தி வாய்ந்த, புரட்சிகரமான, வாழ்வை மாற்றியமைக்கும் அனுபவம் வேண்டும். அரைகுறை வெற்றியுடைய, அரைகுறை மனதுடைய கிறிஸ்தவர்கள் ஒருபோதும் தங்களது வேஷ கிறிஸ்தவத்தால் எவரையுமே தாக்கமடையச் செய்ய முடியாது.

மக்கள் இழந்து போய் விட்டனர், ஆத்துமாக்கள் நரகத்துக்குச் செல்கின்றனர், அவர்களுக்கு சுவிசேஷம் வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் நம்மிலிருக்க வேண்டும். கிறிஸ்தவன் ஞாயிறுதோறும் ஆலய ஆராதனையில் உட்கார்ந்து விட்டு ஆத்தும பாரமற்றவனாகவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டிய அவசரத்தை உணராமலுமிருப்பது மிகப் பெரிய தவறு.

இது நாவினால் ஆராதனை செய்து விட்டு இருதயம் தேவனை விட்டுத் தூரமாயிருப்பதாகும். இந்தக் கடைசி நேரத்தின் தேவை ஆவியால் நிரப்பப்பட்டவர்களும், மிஷனெரி தரிசனமுடையவர்களும், ஆத்தும ஆதாயம் செய்கிற கிறிஸ்தவர்களுமே என்றால் தவறல்ல. சுவிசேஷம் சொல்லப்படுகிற வல்லமையும், ஸ்தாபனங்களின் வல்லமையும் போதாது. தூய ஆவியான வரின் வல்லமை ஒன்றே உலகத்தை அசைத்து அதனை தேவனிடம் திரும்பக் கொண்டு வரக் கூடும்.

அனேகக் கிறிஸ்தவர்கள் குளிர்ந்த நிலையிலும் மனக்கடினத்துடனும் வாழ்கின்றனர் என்பது துக்கமானது. நமது லௌகீகத்தையும் சிரத்தையற்ற நிலையையும் விட்டு விட தேவன் உதவி செய்வாராக. பரத்தின் அக்கினி நம்மீது விழட்டும். சபைகள், பாடகர் குழுக்கள், இசைகள், மற்றும் பணம், பிரசங்கிமார், ஸ்தாபனங்கள் ஆகியவை போதாது. தேவ வல்லமையில்லாவிடில் மனிதர் மரணத்திற்கும், அழிவுக்கும் உட்படுவார்கள்.

தேவனுடைய வட்டத்திற்குள் வாருங்கள்

இது சோம்பல், அமைதி, மந்த நிலை ஆகியவற்றின் ஆதிக்கத்தை விட்டு விட்டு தேவனுடைய சுற்று வட்டத்தில் வர வேண்டிய காலம். மூழ்கிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களின் காட்சி நம்மை செயல்படவும், கரிசனை கொள்ளவும் செய்ய வேண்டும். நாம் நமக்குரியவர்களல்ல. நாம் நம்மையும், நமக்குரியவைகளையும் தேவனுக்காக செலவு பண்ண வேண்டும். நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாகவும் இழந்து போன ஆத்துமாக்களுக்காக செயல்படுவதில் அக்கரையுடையவர்களாகவுமிருக்க வேண்டும். இழந்து போன மக்களுக்காக கல்வாரியின் அன்பு நம்மில் காணப்பட வேண்டும். கண்ணீரோடு விதைத்து கெம்பீரத்தோடு அறுக்க வேண்டும். கிறிஸ்துவின் "போங்கள்" என்ற கட்டளை தான் உலகத்திலேயே மேன்மையான கட்டளை. மரித்துக் கொண்டிருக்கும் உலகத்திற்கு ஜீவிக்கும் கிறிஸ்துவைப் பகிர்ந்தளிப்பது நமது மேலான நோக்கமாயிருக்க வேண்டும்.

செயல்படும் காலம் வந்து விட்டது. ஒவ்வொரு தேவ பிள்ளையும் உலகத்தின் கடைசி மட்டும் கிறிஸ்துவை அறிவிக்க மிகுந்த முயற்சியை எடுக்க வேண்டும். நம்மை ஒரு பொதுவான முறையில் தேவனுக்கு அளிப்பது போதுமானதல்ல. நமது நோக்கத்தைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருக்க வேண்டும்.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காண மாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியம்" *2இராஜா. 3:17,18.*

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதான மும் உண்டாவதாக.

ஆகஸ்ட் மாத தூதனுக்காக என் ஆண்டவரை நன்றி யோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது ஒரு வாசக சகோதரியின் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்:

Praise the Lord

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரருக்கு,

வருகையின் தூதன் வாசகரான அடியார்கள் எழுதும் கடிதம். வருகையின் தூதன் குடும்பத்தார் அனைவருக்கும் கர்த்த ரின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறுகிறோம்.

ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு 29,30-ம் தேதிக்குள் பத்திரிகை கிடைத்து விடும். கையில் கிடைத்ததும் ஆசிரியர் பகுதியை வாசித்தும், இம்மாத வாக்குத்தத்த வசனங்களை வாசித்தும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். அத்து டன் இதய கதறல் - 2017 ஒவ்வொரு மாதமும் நடைபெறும் உபவாச கூடுகைக்காகவும் ஜெபித்து வருகிறோம்.

எங்களுக்காகவும், பிள்ளைகளுக்காகவும், பேரப் பிள்ளை களுக்காகவும் ஜெபிக்க அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

முதுமை பருவத்திலிருக்கிற (69 வயது) எனக்கு தற்சமயம் இருதய வலியினால் கஷ்டப்படுகிறேன். மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்த போது ஆஞ்சியோ or ஆஞ்சியே பிளாஸி பண்ண வேண்டும் என்கிறார்கள். இந்த முதிய பருவத்தில் இந்த சிகிச்சை தேவையில்லை என நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன். ஒவ்வொரு நேரமும் கர்த்தரிடத்தில் கண்ணீருடன் ஜெபித்து வருகிறேன். எனக்காக உங்கள் ஜெபங்களில் என்னைத் தாங்குங்கள்.

மேலும் எனது மகளுடைய மூத்த மகள் 10-ம் வகுப்பில் படித்து வருகிறாள். தற்போது அவளுக்கு படிக்க முடியாமல் தலைவலி, கண்வலி, உடல் சோர்பினால் மிகவும் கஷ்டப் படுகிறாள். அவளுக்காகவும் ஜெபிக்க வேண்டுகிறேன்.

சகோதரி J.R., கிராத்தூர், குமரி மாவட்டம்

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.
VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்
VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

எதிர்பாராத விதமாக கடலூர் சபையினர் தற்சமயம் உபவாச ஜெபம் நடத்த இயலாது என்று அறிவித்தபடியால், தேவ கிருபையாலும் தேவ ஒத்தாசையினாலும் உடனடியாக **அசெம்பிளி ஆப் காட் சபை, குன்னூர், கிருஷ்ணன் கோவில், விருதுநகர் மாவட்டம்** என்ற சபையில் உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்துள் ளோம். கர்த்தருக்குச் சித்தமானால் அதன் விபரத்தை அடுத்த இதழில் எழுதுவேன்.

ஆண்டவருக்கு சித்தமானால், நாங்களும் உயிரோடி ருந்தால், (யாக்கோபு 4:15) மறுபடியும் **எழுப்புதலுக்காக இதய கதறல்** 7 மணி நேர உபவாச ஜெபம் சென்னையில் கீழே காணும் முகவரியில் நடைபெறும். சென்னையிலுள்ள எனது அருமை வாசகரை மிகவும் அன்புடன் அழைக்கிறேன்.

எழுப்புதலுக்காக இதய கதறல்-2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 19-08-2017 3-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 – மாலை 5.00
இடம் : அசெம்பிளி ஆப் காட் சபை,
மணலி, சென்னை

தொடர்பு : பாஸ்டர் J.மோகன் ஜெபக்குமார்
மொபைல் : 94445 38207

உபவாச ஜெபத்தை தொடர்ந்து ஞாயிறும் திங்களும் சென்னையில் **அழைப்பின் எதிரொலி தேவ சபையில்** இருப்பேன்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	27-01-2018 4-வது சனி	E.W.M. Prayer House புதுக்கோட்டை
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை அரியா குப்பம், பாண்டிச்சேரி
ஏப்ரல்		ஜீவ ஊற்று ஊழியங்கள் பெரம்பலூர்
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

கர்த்தாவே, நீரே என் பங்கு

சங்.119:57

ஒரு குறிப்பிட்ட கர்த்தருடைய நாளில் (ஞாயிறு) தேவ சமூகத்தில் இருக்கும்போது **பங்கு** என்ற வார்த்தை எனக்கு ஞாபகம் வந்தது. இதைக் குறித்து ஏற்கெனவே சில வசனங்களை அடியேன் அறிந்திருந்தபடியால், அதையே தேவ பிள்ளைகளுக்கு எழுத ஆர்வம் கொண்டேன்.

1955-ம் ஆண்டு முதல் எனது தகப்பனார் காலஞ் சென்ற **S.தேவதாசன்** அவர்கள் வருகையின் தூதன் பத்திரிகையை நடத்திவருவதை வாசகரில் அநேகர் அறிவீர்கள். அவர்கள் உடனுக்குடன் வாசகருக்கு பதில் கடிதம் எழுதுவதை என்னுடைய கண்களாலே கண்டிருக்கிறேன். அவர்கள் கடித தாளின் (Letter Paper) தலைப்பில் "**கர்த்தாவே, நீரே என் பங்கு**" என்று அச்சிட்டிருப்பார்கள். இந்த **பங்கு** என்பதைப் பற்றி மூன்று முக்கிய குறிப்புகளை மாத்திரம் இம்மாதம் எழுதுகிறேன்.

I. நான் அவர்களுக்கு கொடுத்த அவர்களுடைய பங்கு

போஜனபலியின் பிரமாணம் என்னவென்றால், ஆரோனின் குமாரர் அதைக் கர்த்தருடைய சந்நிதியில்

(7-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிஷன்களில் எது முக்கியம் என்ற கேள்வியே இருக்கக் கூடாது. ஆத்தும ஆதாயத்தில் நடுநிலை கூடாது. உலகம் இன்னும் சுவிசேஷத்தை அறியாமலிருக்கும்போது நாம் அதற்காக எதையேனும் செய்வது அவசியம்.

தேவன் தாமே அவரைக் குறித்த ஒரு முழுமையான காட்சியைத் தரட்டும். அப்போது நாம் பிசாசை அதட்ட முடியும். அதிகமான அக்கினி அபிஷேகத்தையுடைய தீர்க்கர்களையும் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட ஆத்தும ஆதாயம் செய்பவர்களையும் தருவாராக. தேவ பிள்ளைகள் உலகமனைத்தும் வீரர்களாக மாறுவார்களாக. நாம் நமது காலத்தையும், தாலந்துகளையும் வீணாக்குவது சரியல்ல, அது வெட்கமானது. நமது பணம், தாக்கம், காலம் ஆகியவற்றை தேவனிடமிருந்து திருடுவது கூடாது.

எரிவதும், இரக்கம் சொட்டுவதுமான உலகம், பாரங்கொண்டவர்களும், எரிகிறவர்களுமான மக்களை நாடுகிறது.

தேவ அக்கினியால் பற்றி எரியும் ஒரு சபை மட்டுமே அக்கினியால் அழியும் உலகை ஆதாயப்படுத்த முடியும். சொந்த நாட்டிலும் அயல் தேசங்களிலும் ஆத்தும ஆதாயத்திற்காக நமது சக்தியை செலவு செய்வோம். நீண்ட காலமாக சொகுசிலும், பாதுகாவலிலும் வாழ்ந்து விட்டோம். நமது உடலின் காயங்களின் கறைகளையும் ஆத்துமாவின் அசுசிகளையும் நீக்கிவிட தேவன் கிருபை செய்வாராக. நமது இருதயத்தின் சிலந்தி வலைகளை அகற்றி, அழியும் ஆத்துமாக்களை இரட்சிக்க நம்மை பயன்படுத்துவாராக. தேவனுக்காக முன்னேறிச் செல்ல வேண்டிய காலகட்டம் இது. நாம் எதையேனும் சொன்னால் மட்டுமே உலகம் கவனிக்கும்.

மிஷனெரி பிரச்சனைக்கு விடை எழுப்புதல். கிறிஸ்துவோடு நெருங்கிய உறவு கொண்டிருப்பவர்கள் மட்டுமே இழந்து போன மக்களுக்காகக் கரிசனை கொள்வார்கள். தேவனோடு நடக்கிறவர்களுக்கு மட்டுமே ஜெபத்தின் வலிமை தெரியும். தேவ வசனத்தால் தங்கள் ஆத்துமா பூரிதமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தாமாகவே மிஷனெரி சிந்தையுடனிருப்பர். தேவனோடு சரியான தொடர்புடையவர்கள் மிஷனெரிகளுடனும் நல்ல தொடர்புடையவர்களாயிருப்பார்கள்.

கிறிஸ்து அதிக அளவிலான அர்ப்பணத்தை நம்மிடம் எதிர்பார்க்கிறார். முழுமையான கீழ்ப்படிதல், முழு இருதயத்தோடான ஒப்படைப்பு ஆகியவை அவர் எதிர்பார்ப்பவை. ஆதி கிறிஸ்தவர்கள், முதலாவது தங்களை கர்த்தருக்கு ஒப்படைத்தார்கள். அவர்கள் தங்களுக்காக வாழவில்லை. அவர்களுக்காக மரித்து உயிரோடெழுந்த ஆண்டவருக்காக வாழ்ந்தார்கள் *2கொரி.5:15.* தேவன் மிகப்பெரிய செயல்களை நம் மூலமாகச் செய்ய, நாம் நம்மை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

நாம் ஆழமாகச் செல்லச் செல்ல அதிகமான ஜீவ தண்ணீரைப் பெற முடியும். மக்கள் தேவன் அசைவாடும் படி காத்திருக்கின்றனர். ஆனால் தேவன் நமக்காகக் காத்திருக்கிறார். "உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொண்டிருக்கும்படி விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை" *ஏசா.64:7.*

ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வு ஏற்படுவதுதான், உலக சுவிசேஷப் பணிக்கு பதிலாயிருக்கிறது. தூய ஆவியால் நம்மில் ஊற்றப்பட்ட ஆத்துமாக்கள் மீதான அன்புதான் நம்மிலுள்ள சுயநோக்கையும் சொகுசான வாழ்வின் நாட்டத்தையும் நம்மை விட்டகற்றும். கிறிஸ்தவர்கள் ஆழமான அனுபவத்திற்குள் வரும் வரை சுவிசேஷம் அதிக தூரம் செல்ல முடியாது.

தியாகமான கொடை, ஊழியத்திற்காக செல்லுதல் ஆகியவை ஆவிக்குரிய வாழ்வைப் பின்பற்றும் காரியங்கள். எழுப்புதல் வரும்போது கிறிஸ்தவர்களை இயேசுவின் மிகப் பெரிய கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி நாம் சொல்ல வேண்டியதில்லை. வெளிநாடுகளின் மிஷனெரிகளின் வெற்றிக்கும் உள்நாட்டு சபைகளின் ஆவிக்குரிய வாழ்வுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு.

எழுப்புதல் வரும்போது நிர் விசாரம், சடங்காசாரம், சுயநலம், கனியின்மை போன்றவை அகன்று விடும். அது மிஷன்களை சரியான இடத்திலும் சரியான முக்கியத்துவத்திலும் கொண்டுவரும். **ஜெபமும், எழுப்புதலும் நமது வாஞ்சையாயிருக்கட்டும்.** நமது பலவீனமான ஆத்துமாக்களுக்கு தூய ஆவியானவரின் புதிய ஜீவாலை தேவை.

நெருப்பு மறுபடியும் இறங்க வேண்டும்

ஆவிக்குரிய இக்கட்டான நிலைக்கு நாம் வருவதுவரை எழுப்புதல் வருவதில்லை. பெந்தெகொஸ்தே நாளின் கிரயத்தை நாம் செலுத்த வேண்டிய காலம் இது. உலகமனைத்தும் வல்லமையடைவதும், எழுப்புதல் ஏற்படுவதும் மிக அவசரம்; எனவே அக்கினி மறுபடியும் இறங்க வேண்டும். நமது இருதய விருப்பங்களை நிறைவேற்றுவதாக தேவன் கூறியிருக்கிறார்.

"உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும், அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல் வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்" *ஏசா.33:15.*

நாம் விசுவாசித்து ஜெபித்து, தியாகம் செய்து கொடுத்து, கீழ்ப்படிந்து அவருக்கு அர்ப்பணிப்போம்.

கர்த்தாவே! இறங்கி வாரும், நாங்கள் உமக்காகக் காத்திருக்கிறோம்

Come down, Lord! we wait for you

Roger Flisworth

வேத பகுதி:- ஏசா.64:3-4

தேவனைப் பற்றிய இரு காரியங்கள் நிச்சயமானவை. முதலாவது அவர் வல்லமையுடையவர். அதில் சந்தேகமேயில்லை. ஏசாயா அவரைக் குறித்து பர்வதங்களை உருகச் செய்கிறவர், ஜாதிகளைத் தத்தளிக்கச் செய்கிறவர், அக்கினியால் தண்ணீரைப் பொங்கப் பண்ணுகிறவர் என்று விவரிக்கிறார் *(64:1-2).*

இரண்டாவதாக நமக்கு தேவ வல்லமை வேண்டும். சபை நிற்க முடியாமல் தள்ளாடுகிறது. அது தனது வாழ்வை மறுபடியும் வலுப்படுத்தவோ, பாவிகள் தேவனுடைய ஜீவனை அறிந்து கொள்ளவோ கிரியை செய்யக்கூடாது. தேவனில்லாத நிலையில் அது அபத்தமான நிலைக்கு வந்து விடும். "தூயவரின் ஆவியானவர் இறங்கி வராவிடில் எல்லாம் வீண்" என்பது ஒரு பாடல் வரி.

தேவ வல்லமை, நமது தேவை இவற்றிற்கிடையில் சிலவேளைகளில் கடக்கக் கூடாத பாதாளம் இருக்கிறது. நாம் கவனமாயிராவிட்டால் தவறை தேவன் பேரில் போடலாம். நாம் நமக்காகப் பரிதவித்து, சிக்கனமும் நிர்விசாரமுமான ஒரு தேவனிடமிருந்து சில நன்மைகளைப் பெறுவதுதான் நமக்கு ஏற்பட்ட நிலை என்று எண்ணுகிறோம்.

வேதபுத்தகத்தின் அடிப்படையில் பிரச்சனை தேவனுக்குரியதல்ல. இதே தீர்க்கன் "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்" என்று எழுதுகிறார். சங்கீதக்காரன் "உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது" என்கிறான். *சங்.31:19.* சார்லஸ் ஸ்பர்ஜன் இதைக் குறித்து, "தேவன் உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார். நமது தேவைகள் ஆரம்பிக்கும் முன்பாகவே ஆவல் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துகிறார். நமது தேவைகள் எல்லாவற்றிற்கும் அவரிடம் ஆதாரம் உண்டு. நமது ஜெபங்கள் ஏறெடுக்கப்படு முன்பாகவே அவற்றிற்கு அவர் பதில்களை ஆயத்தப்படுத்துகிறார்" என்று கூறுகிறார்.

நாம்தான் தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்ள தடையாயிருக்கிறோம். காரணம் நாம் தேவ வல்லமையைப் பெற்றுக் கொள்ள அவர் அளித்திருக்கும் வாய்க்காலை நாம் பயன்படுத்தவில்லை. அந்த வாய்க்கால் எது? ஏசாயாவின் ஜெபத்தில் இதைக் காணலாம். "உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை...." *வ.4.* தேவனுக்காகக் காத்திருப்பது என்பது தேவனுடைய வல்லமைக்கும் நமது தேவைக்குமிடையிலுள்ள வாய்க்காலாகவும், பாலமாகவுமிருக்கிறது.

கர்த்தருக்காக நாம் காத்திருப்பதில் 3 முக்கிய அம்சங்களுண்டு

1.எதிர்பார்த்திருத்தல்:

எதிர்பார்ப்பின் ஆவியில் உறுதி, நம்பிக்கை, ஆர்வம் ஆகியவை அடங்கியுள்ளன. நம்பிக்கை என்று சொல்லும் போது ஒருவருக்காக நாம் காத்திருந்தால் அந்த நபர் நிச்சயம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் வருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம். இந்த நம்பிக்கை நன்கு அஸ்திபாரமிடப்படாவிட்டால் அது ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

ஆனால் தேவன் ஏமாற்றுபவரல்ல. அவர் நம்பக்கூடியவரும் உத்தமமுமானவர் புல.3:22-23. அதை எப்படி நம்ப முடியும்? சரித்திரத்தில் அவர் தம்மை உத்தமராக விளங்கப் பண்ணியிருக்கிறார். "நீர் இறங்கி வாரும்" என்று தீர்க்கர் கதறும் போது சரித்திரத்தில் தேவன் தமது ஜனத்திற்காக பலத்த வல்லமையோடு இறங்கி, பெரிதும் ஆச்சரியமுமான காரியங்களை செய்ததை நினைவுபடுத்துகிறார். *(யாத்.34:10; நியா. 5:4)* அவர்கள் எதிர்பாராத செயல்கள் அவை.

மேலும் முன்பு அவர் இறங்கி வந்துள்ளார். சரித்திரம் இதற்கு சாட்சியாயிருக்கிறது. சபையின் சரித்திரத்தில் எழுப்புதலின் காலங்களும், அப்போது கர்த்தர் தமது ஜனத்தை சந்தித்து அவர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்ததையும் நிறைவாகக் காணலாம். அமெரிக்காவிலும் பல்வேறு இடங்களில் எழுப்புதல்கள் நிகழ்ந்துள்ளன. ஜோனத்தான் எட்வர்ட்ஸ், உவைட் ஃபீல்டு ஆகியோர் இதற்குக் காரணமாயிருந்தனர். 1858-ல் ஜெரேமியா லான்ஃபியர் போன்றவர்களின் தலைமையில் நியூயார்க்கில் எழுப்புதல் ஏற்பட்டு மில்லியன் கணக்காக மக்கள் மனந்திரும்ப ஏதுவாயிற்று.

1905-ல் டென்வெர் என்ற இடத்தில் வில்பர் சாப்மான் என்பவரின் பிரசங்கத்தால் எழுப்புதல் ஏற்பட்டது. அங்குள்ள நாளிதலில் ஜனவரி 20-1905-ல் "பட்டணம் முழுவதும் ஜெபத்திற்காக நிலையில் நிற்கிறது. வியாபாரம் அதிகமாக நடைபெறும் நேரங்களிலும் ஆத்துமா அருவருப்பான எண்ணங்களுக்கு மேலாக உயருகிறது" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. மேலும் அதற்குக் கீழாக "விசேஷித்த எழுப்புதலால் தூண்டப்பட்ட சுவிசேஷத்தின் வெளிப்பாடு" என்ற சிறு தலைப்பும் காணப்பட்டது.

எதிர்பார்ப்பில் ஆர்வம் இருக்க வேண்டும். குதிகாலை உயர்த்தி கழுத்தை நீட்டி ஒரு சம்பவத்தை ஆர்வத்துடன் பார்ப்பது போன்ற ஆர்வம் நிறைந்திருக்க வேண்டும்.

நாம் ஆர்வத்தோடிருப்பதற்கான காரணமும் இருக்கிறது. ஏசாயாவின் மொழியில் காது கேட்டதுமில்லை, கண் கண்டதுமில்லை என்று தேவன் விவரிக்கப்படுகிறார். அவர் இறங்கி வரும்போது எதிர்பாராத செயல்களை அவர் செய்வார். ஒரு சிறுபிள்ளை கிறிஸ்மஸ் காலத்தை எதிர்பார்ப்பது போல அவர் தமது பணிகளை எழுப்புதலடையச் செய்யும் போது எவைகளைச் செய்வாரென ஆவலுடன் காத்திருப்போம்.

2. ஒருமை:

ஒருவருக்காகக் காத்திருக்கும் போது அதிலேயே நமது மனம் ஒருமைப்படுகிறது. வேறு காரியங்களில் ஈடுபட முடியாது.

நாம் காத்திருக்கத் தடையாயிருப்பவற்றை விட்டு விட வேண்டும். எபிரேயத்தில் காத்திருப்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பதம் 'entrench', இது தேவனுக்குள் நம்மை புதைப்பது என்று பொருள்படுகிறது.

எனவே எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமென்பது பொருளல்ல. ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் உத்தியோகங்களை ராஜினாமா பண்ணி விட்டு கர்த்தருக்காக காத்திருந்தனர். கர்த்தருக்காகக் காத்திருப்பது நமது எண்ணத்தை விட்டு அகலாமலிருக்க வேண்டும் என்பதே பொருள்.

தேவனுக்கு முன்பாக அமைதியாயிருக்க கவனச் சிதறல்கள் கூடாது. எனவே "தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும், தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது" புல.3:25,26 என்று எரேமியா கூறுகிறார்.

நாம் எழுப்புதலைக் குறித்து பேசிக்கொண்டு, அது நிகழுவதற்கான ஒரு காலத்தையும் எதிர்பார்க்கிறோம். அந்த சமயத்தில் அது நிகழாவிடில் எதையோ எழுப்புதல் என்று கூறிக் கொள்கிறோம். இவ்வாறு சபைகள் தவறான ஆசைகளால் நல்ல பலனைப் பெற பிரயாசப்படுகிறார்கள்.

இவையெல்லாம் அமைதியாகக் காத்திருப்பதற்கு எதிரானவைகள். தேவனுக்கு முன்பாக அமரிக்கையாகக் காத்திருப்பது என்பது, நமது ஞானம், வல்லமை ஆகியவற்றின் குறைவை உணர்ந்து தேவன் பேரிலேயே சார்ந்திருப்பதாகும். "குறிப்பிட்ட கட்டளை வரும்போது, உண்மையான செயல்பாட்டினை கூடாமலாக்குவது தவறான செயல்பாடுகளாகும்" என்று மார்கன் கூறுகிறார். சுருங்கச் சொன்னால் தாழ்மை உணர்வு நமக்கு வேண்டும். *(ஏசா.57:15 வாசிக்க).*

எழுப்புதலை அனுப்பும் தேவன் பெருமையும் வீம்புமுடையவர்களை அல்ல அமரிக்கையுடனும், அடக்கத்துடனும் தேவனுக்காகக் காத்திருப்பவர்களையே எழுப்புதலடையச் செய்யக் காத்திருக்கிறார்.

பொறுமை

தேவன் அசைவாடுதலை அனுப்ப தகுதியான நேரத்தை தரும் வரை பொறுமையுடனிருக்க வேண்டும். பொறுமையைக் குறித்து யாக்கோபு நிருபத்தில், "இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்; நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" யாக்.5:7-8 என்று படிக்கிறோம்.

நமது பொறுமையின்மை ஆபிரகாமை நினைவுபடுத்துகிறது. அவனுக்கு சுதந்தரவாளியாக ஒரு மகனைக் கொடுப்பதாக வாக்குத்தத்தை அவன் பெற்றிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல வயோதிபம் ஒரு மகனைப் பெறுவதைக் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. தன் சொந்த விருப்பத்தின்படி மனைவியின் மறுமனையாட்டியால் ஒரு மகனைப் பெற்று இஸ்மவேல் எனப் பெயரிட்டான். இதில் தேவன் பிரியப்படவில்லை. இஸ்மவேல் வேதனை உருவாக்கினான். ஆனால் தேவனுடைய சமயம் வந்தபோது ஈசாக்கு பிறந்தான்.

இஸ்மவேல் நமக்கு தலைவலியாயிருப்பான் என்று அறியாமல் பொறுமையற்று ஆபிரகாமைப் போல நாமும் தவறு செய்யவில்லையா? பொறுமையாயிருந்தால் மட்டுமே தேவனுடைய மிக நல்ல ஈவுகளைப் பெற முடியும். சில கிளர்ச்சிகளை ஏற்படுத்தி அவற்றை எழுப்புதல் என்று சொல்ல வேண்டாம். அவர் எழுப்புதலை ஏற்படுத்தக் கூடியவர்.

எனவே எதிர்பார்ப்புடன் காத்திருப்போம். கவனச்சிதறல்களைத் தவிர்ப்போம். பொறுமையுடன் காத்திருப்போம். சங்கீதக்காரனுடைய வசனத்தை குறிக்கோளாகக் கொண்டு கர்த்தருக்குக் காத்திருப்போம்.

"கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்.27:14

எழுப்புதலில் தூய ஆவியானவரின் வெற்றி

The Holy Spirit's triumph in Revival

Jonathan Goforth (1859 - 1936)

ஜோனத்தான் கோஃபோர்த் என்பவர் கனடாவிலுள்ள பிரிஸ் பிட்டேரியன் சபையின் மிஷனெரியாகச் சீனாவில் பல்லாண்டுகள் சேவை செய்தவர். அவரும் அவரது குடும்பமும் பாக்ஸர் புரட்சியின் காலத்தில் நூற்றுக்கணக்கான மிஷனெரிகளும், ஆயிரக்கணக்கான சீன கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்ட போது உயிர் தப்பியது ஒரு அற்புதம். சீனாவில் மிஷனெரியாயிருந்த போது அவரை தேவன் இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷகனாக மட்டுமல்ல சீன சபையில் எழுப்புதல் மூலம் ஆசீர்வாதங்கள் ஏற்படவும் காரணமாயிருந்தார். அவர் எழுதிய By my spirit என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியைத்தான் கீழே காண்கிறோம்.

1900-ம் ஆண்டில் பாக்ஸர் எழுச்சியின்போது ஷின்மின்ஃபு என்ற பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவ சமுதாயம் மிகவும் துன்புறுத்தப்பட்டது. ஐம்பத்து நான்கு பேர் இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

ஷின்மின்ஃபுவில் நடந்த எழுப் புதல் கூடுகையின் நான்காவது நாளின் பிற்பகல் இன்னும் அதிகமாக 3 மணி நேரத்திற்குப் பிறகு நான் ஆசீர்வாதம் கூறி முடிக்கவும் கூடி வந்தவர்களிட மிருந்து "எங்கள் மேல் இரக்கமாயிருந்து கூட்டத்தைத் தொடருங்கள் பலநாட்க ளாக எங்களுக்குத் தூங்க முடியவில்லை. எங்கள் பாவங்களை விட்டுவிட வில்லையென்றால் இன்னுமொரு இரவை அப்படியே நாங்கள் கழிக்க வேண்டியதாயிருக்கும்" என்று சத்தம் கேட்டது. நான் ஒரு பெண் மிஷனெரி யிடம் பெண்களையும், பிள்ளைகளையும் பெண்கள் பள்ளிக்கு அழைத்துச் செல் லவும் அசைவாடுதல் முடிவுறும்வரை தொடரவும் கூறினேன். கூடுகைகள் முடிவதற்கான எந்த நம்பிக்கையும் இல்லாதிருந்தது.

பெண்கள் வெளியே சென்ற போது சுவிசேஷகர் ஒருவர் பீடத்திற்கு முன்னால் வந்து முழங்காற்படியிட்டார். உத்தமமாக அவர் பல பாவங்களை அறிக்கையிட்டார். ஆயினும் பாவபாரம் அவரை விட்டு நீங்கியதாகத் தெரிய வில்லை. நான் அவரிடம், "நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டபடியால் தேவன் அவைகளை மன்னித்து உங்களை சுத்திகரிக்க நீதியுள்ளவராயிருக்கிறார். சமாதானத்துடன் போங்கள்" என்றேன். "எனது மிகப் பெரிய பாவத்தை நான் அறிக்கையிடவில்லை. நான் மன்னிப்ப தில்லை" என்று அவர் பதிலளித்தார். "அப்படியானால் தேவன் உங்களை மன்னிக்க முடியாது" என்றேன். மனித முறைப்படி "நான் மன்னிப்பது கூடாதது. பாக்ஸர் புரட்சியின் போது ஒருவன் என் தந்தையைக் கொன்று விட்டான். அவனைப் பழிவாங்க எண்ணிக் கொண்டிருக்கிறேன். 'உன் தந்தையின் மேலுள்ள உன் பாசம் எங்கே? அவரைக் கொன்றவனை ஏன் நீ பழிவாங்கவில்லை' என்று என் நண்பன் கேட்டுக்கொண்டே இருக்கிறான். அவனுக்கு நான் என்ன பதில் சொல்ல! நான் அந்த கொலை பாதகனை மன்னிக்க மாட்டேன். அவனை அழிக்க வேண்டும்" என்றான். அப்போது நான் 'தேவவசனத்தின்படி அவர் உன்னை யும் மன்னிக்க மாட்டார்' என்றேன்.

அப்போது ஒரு பாடசாலை சிறு வன் எழுந்து நின்று, "1900-ல் பாக்ஸர்கள் வந்து என் வீட்டிலிருந்த தந்தையைக் கொன்றனர். அதிலிருந்தே நான் வளர்ந்து எனது தந்தைக்காகப் பழிவாங்க வேண்டு மென்ற எண்ணம் என்னிலிருக்கிறது. கடந்த இரண்டு மூன்று நாட்களாக தூய ஆவியானவர் என்னை மிகவும் துக்க மடையச் செய்வதால் நான் புசிக்கவும், தூங்கவும் எதையும் செய்யக் கூடாமலு மிருக்கிறேன். அவர் என்னை கொலை பாதகர்களுக்கு இயேசுவின் மூலம் மன்னிக்கும்படி தூண்டுகிறார். எனக்காக ஜெபியுங்கள்" என்றான்.

இதுபோல 9 சிறுவர்கள் எழும்பி எவ்வாறு தங்கள் தந்தை, தாய், சகோதர, சகோதரிகள் தங்கள் கண்களுக்கு முன்பாகப் பாக்ஸர்களால் கொல்லப் பட்டார்கள் என்றும் அவர்களைப் பழி வாங்கும் எண்ணத்தோடிருந்ததாகவும் கூறினார்கள். இப்போது அதைக்குறித்து அதிக துக்கமடைவதாகவும், அவர் களுக்காக ஜெபிக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டனர். தங்களுக்குத் தீமைசெய்தவர்களுக்கு மன்னிக்க தேவ கிருபை கிடைக்க ஜெபிக்கும்படி கேட்டனர்.

பெண்கள் கூடுகையை முடித் துச் சென்ற பிறகும் எங்கள் கூடுகை மேலும் 2 1/2 மணி நேரம் நீடித்தது. அனைவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு முடியும்வரை அந்த சுவிசேஷகர் பீடத்தினருகில் முழங் காலிலியே நின்றார். கூடுகை முடிந்ததும் சபையாரை நோக்கி எழுந்து நின்றார். அவருடைய முகம் சோர்ந்து காணப் பட்டது.

"நான் தீர்மானித்து விட்டேன், அந்த எதிரியை நான் கொல்லும்வரை நான் இளைப்பாறுவதில்லை" என்று கூறினார். இனி அவரை நான் பார்ப்ப தில்லை என்று நான் எண்ணினேன்.

அடுத்தநாள் காலை

அடுத்தநாள் காலை நான் ஆலயத்தில் பிரவேசிக்கையில் முகம் பிரகாசித்தவனாக பீடத்தினருகில் அவர் நின்று கொண்டிருந்தார். என்னிடம் பேசுவதற்கு முன்பாகப் பள்ளிச் சிறுவர் களிடம் பேச அனுமதி கேட்டார். சிறு வர்களைப் பார்த்து, முந்தைய நாளில் அவர்களது அருமையானவர்களைக் கொன்றவர்களுக்கு மன்னிப்பு கொடுக்கும் கிருபைக்காக ஜெபித்தவர்களை முன்பாக அழைத்தார். அந்த 9 மாண வர்களும் முன்னால் வந்து நின்றனர்.

அவர்களிடம் தாம் அவர்களது பாவ அறிக்கைகளையும், மன்னிக்கும் சிந்தையினையும் முந்தின நாள் கேட்ட தாகவும், ஆனால் ஊழியக்காரனான நான் மன்னிக்க மனமின்றி பழிவாங்கும் எண்ணத்துடன் சென்றதையும் கூறினார்.

தொடர்ந்து அவர், "நான் ஆரா தனை முடிந்தபின் வீடு சென்றேன். சாத் தான் எனது நடக்கையால் உங்களைக் கொண்டு என்னை வெட்கப்படுத் தினான். சாத்தான் சத்துருவை மன்னிப் பது மதியீனம் என்பான். அவனை வெட்கப் படுத்தும்படி 9 பாடல் புத்தகங்களை இனாமாக உங்களுக்கு அளிக்கிறேன். நீங்கள் தேவனைத் துதிக்கும்படி இதனைத் திறக்கும் போதெல்லாம் சுவி சேஷகனாகிய நான் என் தந்தையைக் கொன்ற கொலையாளியை மன்னிக்கும் கிருபையினைப் பெற்றேன் என்பதனை நினைவு கூருங்கள்" என்று கூறினார்.

அதே வேளையில் யார் மீதெல் லாம் பழி தீர்க்க வேண்டுமென்ற பெயர் களின் பட்டியல் கொண்டு வரப்பட்டி ருந்ததோ அவையெல்லாம் துண்டு களாகக் கிழித்து எறியப்பட்டது.

நியூச்வாங் என்ற இடத்தில்

1815 - 1868 வரை வாழ்ந்த வில்லியம் பர்ன்ஸ் என்பவரின் கல்ல றைத் தூண் நியூச்வாங்கிலிருக்கிறது. இங்குதான் அவர் கடைசியாக ஆண்ட வருக்காக உழைத்தார். ஸ்காட்லாந்தை சேர்ந்த இம்மிஷனெரி தன் சொந்த நாட்டிலும் சீனாவிலும் சந்தித்த அனை வரையும் கிறிஸ்துவின் அறிவுக்குக் கொண்டு வந்தார். புறஜாதியைச் சேர்ந்த தச்சுப் பணியாளன் அவரது சவப்பெட்டியை செய்தான். அவன் அவர் மூலம் ஆண்டவரை அறிந்து நான் அங்கு சென்றபோது அச்சபையின் மூப்பனாக செயல்பட்டான்.

கர்த்தர் வல்லமையாக முக் டென் என்ற இடத்தில் செயல்பட்ட போது ஒரு மிஷனெரி என்னிடம் "தேவன் நம்மை இங்கு அதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால் அவர் நியூச்வாங்கில் எதுவும் செய்ய முடியாது என்று எண்ணுகிறேன். அங்குள்ள சபை மரித்து விட்டது, இனி அதை அடக்கம் செய்வது நலம்" என்று கூறினார்.

நான் பதிலாக, "நீங்கள் இப் போது தேவ வல்லமையை அறிந்து கொள்வீர்கள். தேவனுடைய இரக்கம் நீயூச்வாங்கில் காண்பிக்கப்படும்படி யாக ஜெபிப்போம்" என்றேன்.

இன்னொரு இடத்தில் கூட்டங் களை முடித்த போதும் இதே கதையைக் கேட்டேன். "நாங்கள் கரத்தரைத் துதித் தோம், ஏனென்றால் அவர் பெரிய காரியங்களைச் செய்தார்" என்று அவர்கள் மகிழ்ந்தனர். "ஆனாலும் நியூச் வாங்கில் எழுப்புதல் தூரமாயிருக்கிறது" என்றனர்.

அப்போதும் நான், "நீங்கள் தேவ வல்லமையைக் கண்டவர் களல்லவா? ஏன் ஜெபிக்கக் கூடாதா?" என்றேன். அதுபோல க்வாங்னிங், சின்ஷெ, ஷின்மின்ஃபு போன்ற இடங்களிலும் நியூச்வாங் நம்பிக்கை இழந்த இடமா கவே கூறப்பட்டது.

ஹண்டர் என்பவர் க்வாங்னிங் லிருந்து எனக்கு முன்பாக நியூச்வாங் கிற்கு ஜெபக்கூடுகைகள் நடத்தச் சென் றிருந்தார். நான் சென்று உணவு மேசை யில் உட்கார்ந்த போது அவர் அனேக செய்திகளைக் கூறினார்.

"அதிசயமான காரியங்கள் நியூச் வாங்கில் நடக்கின்றன" என்று மகிழ்ச்சி யுடன் கூறினார். தன் ஜீவனைக் காப்பதற்காக 1900 ஆண்டில் ஒரு பெண் கர்த்தரை மறுதலித்ததாகவும், மனம் உடைந்து தனக்கு ஒரு தருணம் வாய்த்தால் தன் ஜீவனை ஆண்ட வருக்கு அர்ப்பணிப்பதாகவும் அன்று காலையில் அவள் சாட்சி கூறியதை அவர் எங்களிடம் அறிவித்தார். மேலும் கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் ஒரு அலுவல கத்தை ஏமாற்றி தான் 200 பவுன் பெற்ற தாகவும் அதைத் திருப்பிக் கொடுப்ப தாகக் கூறியதாகவும் இன்னொரு சாட்சியையும் அவர் கூறினார்.

அடுத்த நாள் காலையில் ஜெபக் கூடுகை ஆரம்பித்தது. நான் பீடத்தை அடைந்ததும் வழக்கம் போல சில வினாடிகள் ஜெபித்து விட்டு மக்களைப் பார்த்தேன். நியாயாசனத்தில் நிற்பது போல கண்ணீருடன் பாவ அறிக்கை செய்து கொண்டிருந்தனர்.

அனேகர் நம்பிக்கையற்ற சபை என்று சொல்லப்பட்டதல்லவா? ஆனால் ஒரு வார்த்தை பேசாமலும், ஒரு பாடல் பாடப்படாமலும், ஒரு ஜெபம் ஏறெடுக் கப்படாமலும் இவ்வித ஆச்சரியம் நடை பெற்றது. பல இடங்களிலும் பணி செய்த மிஷனெரிகளின் ஜெபத்திற்கு தேவ ஆவியானவர் அளித்த பதில்தான் இது. தேவன் எவைகளைச் செய்யக் கூடும் என்பதை அறிந்து அக்காட்சி யுடன் இந்த சபைக்காக அவர்கள் மன்றாடினார்கள் என்பதே காரணம்.

மருத்துவ வள்ளத்திலிருந்து கள்வர் குகை மட்டும் பகுதி – 2

From hospital boat to Robbers den (Part - 2)

Oswald Smith

வேகமாக கள்வர்கள் வள்ளத் தைத் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டனர். கண்ணில்பட்ட பொருட் களையெல்லாம் சொந்தமாக எடுத்துக் கொண்டனர். மிஷனெரிகள் அவர் களுக்கு மரியாதையுடன் தேனீர், கேக் போன்றவற்றை வழங்கிய போது அனைத்தையும் உட்கொண்டனர். மிஷனெரிகளின் அயல்நாட்டுப் பொருட் களெல்லாம் அவர்கள் கப்பலுக்கு மாற்றப் பட்டது. இறுதியாக அவர்கள் மிஷனெ ரிகளை ஏளனமாகப் பார்த்தனர்.

ஜாஃப்றே மிகவும் அருமையாக வைத்திருந்த ஒரு தொப்பியையும் ஒரு வன் எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டான். அது அவருக்கு சற்று ஏமாற்றத்தை அளித்தது. அவனோ கண்ணாடி முன்னின்று தன்னைப் பார்த்து திருப்தியடைந்தான்.

"சகோதரனே, நீ என் தொப் பியை எடுத்துக் கொள்; இதை உனக்குப் பரிசாக அளிக்க விரும்புகிறேன்" என்று ஜாஃப்றே அவனிடம் பேசிய போது, திரும்பிப் பார்த்த கள்ளன் எந்தப் பதிலும் கூறவில்லை.

ஜாஃப்றே நின்று கொண்டே அங்கு நடைபெறுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். கிருபை யின் ஆவி அவரை நிரப்பியபடியால் அவர்களிடம் தயாள சிந்தையுடன் நடந்து கொண்டார். அவர்களிடம் கடினமாக நடந்து கொண்டால் அவர் களும் கடினமாகி விடுவார்களே. நமது கோபத்தைக் காண்பித்தால், அவர்கள் கேவலமாக நடந்து கொள்ளலாம். என்ன நடக்கும் என்பதை தேவன் மட் டுமே அறிவார். எனவே தாம் ஒரு நல்ல கைதியாயிருந்து எந்தத் தொல்லையும் கள்வர்களுக்குக் கொடுக்கக் கூடாது என தீர்மானித்தார்.

ஒரு வருடமாக சிரமத்துடனும் கருத்துடனும் தயாரித்த தொடர் இலக் கியங்களைத் தமது பிரயாணத்தில் தொடர்ந்து எழுத எண்ணினார். ஆனால் தனது விலையேறப்பெற்ற மற்றப் பொருட்களுடன் இதுவும் காணாமற் போய் விட்டது. அதைப் பெற்றுக் கொள்ளும்படி உத்தமமாக ஜெபித்தும் பயனில்லாமற் போயிற்று. அவைகளைத் திரும்ப எழுதுவது மிகக் கடினமல்லவா!

ஜாஃப்றே தனது கைக்கடி காரத்தை, எடுத்துச் செல்லக் கூடிய சிறிய தட்டெழுத்து எந்திரத்தில் இருந்த ஒரு அறைக்குள் அவர்கள் காணாமலே ஒளித்து வைத்து விட்டார். அதைத்தன் சிறையிருப்புக் காலத்தில் பயன்படுத்த விரும்பினார்.

திருடர்கள் மிஷனெரிகளின் விலையேறப் பெற்ற உடைமைகளைத் தங்கள் கப்பலில் சேர்த்த பின்பு, கைதி களையும் கப்பலுக்கு அழைத்துச் சென்று தங்கள் ஒளிப்பிடத்தில் சேர்க்க விரும் பினர். கரைசேர்ந்தபோது துப்பாக்கி முனையில் மிஷனெரிக் கைதிகள் நடத் திச் செல்லப்பட்டனர்.

"சகோதரரே எங்களை பய முறுத்த வேண்டாம். நாங்கள் நல்ல விதமாக நடந்து கொள்வோம். நான் துப்பாக்கி பிடித்திருப்பவர்களை அதிக மாக மதிப்பவன். இதை உறுதிபடச் சொல் கிறேன்" என்று ஜாஃப்றே சொல்லி முடிக்க தரைப்பயணம் ஆரம்பித்தது.

ஜாஃப்றே தனது கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்து ஒரு போதுமில்லாதபடி ஜெபித்தார்."ஆண்ட வரே எந்த ஒரு சொட்டு இரத்தமும் சிந்தப்படக் கூடாது, ஒரு எலும்பும் முறிக்கப்படக் கூடாது, கொடிய நோய் கள் ஒருவரையும் அணுகக்கூடாது, இந்த மக்களில் சிலரையாவது இரட்சியும்" ஆமென்.

கொள்ளையர்களின் கைகளில்

முழுவதும் ஆயுதமணிந்த இரு வர் ஒரு கைதிக்கு காவலாக ஒருவர் முன்னும் ஒருவர் பின்னுமாக அணி வகுத்துச் சென்றனர்.

ஒரு நல்ல சிறைக் கைதியாக இவ்வாறு நடந்து கொள்வதால் துக்கம், கோபம் இவற்றைவிட சந்தோஷமும் திருப்தியும் காண்பிப்பது நல்லது என் பதை உணர்ந்த ஜாஃப்றே அவர்களிடம் வேடிக்கையாகப் பேசி அவர்களை நகைக் கச் செய்தார். வேடிக்கைப் பேச்சு அவர் களை வெகுவாகக் கவர்ந்து விட்டது.

இந்த அனுபவங்களுக்குப் பின்பு ஜாஃப்றே விடுதலை பெற்ற பின்பு "கொள்ளையர்களின் மத்தியில் நான் எப்படி இவ்வாறு நடந்து கொள்ள முடிந்தது? நான் ஏன் பயப்படவில்லை? தேவன் எந்த சந்தர்ப்பத்திலும் போது மான கிருபையை அளிக்கிறார் என்று கண்டு கொண்டேன். எனக்கு எந்த பய உணர்வும் ஏற்படவில்லை" என்று கூறியிருக்கிறார்.

முதலாவது வள்ளத்தை நிறுத் தியபோது சமயம் மாலை 5 மணி. இப் போது 5 மணி நேரம் ஒரே தொடர்பாக அவர்கள் நடந்து விட்டனர். இருள் சூழ ஆரம்பித்தது. எங்கும் வெளிச்சமில்லை. எனவே நடைபாதை தெளிவாகத் தெரியவில்லை. மிஷனெரிகள் களைத் துப் போயினர். ஆனால் கொள்ளையர் களோ விடவில்லை. பாதை அவர்களுக் குத் தெரிந்திருந்தபடியால் விரைவாக நடந்து கொண்டேயிருந்தனர்.

நடு இரவில் ஒரு பரணை வந்து அடைந்தனர். அங்கு அவர்கள் திணிக் கப்பட்டு இளைப்பாறும்படி கட்டளை அளிக்கப்பட்டது. ஒரு மங்கலான விளக்கு கூரையிலிருந்து தொங்க விடப் பட்டிருந்தது. கொள்ளைப் பொருளைப் பங்கிட்டவர்களும் கைதிகளைக் காக் கும்படி நியமிக்கப்பட்டவர்களும் தவிர மற்றவர்கள் அயர்ந்து நித்திரை செய்தனர்.

ஜாஃப்றேயும் அவருடைய குழு வினரும் சங்கிலிகளால் கட்டப்பட வில்லை. ஆனால் ஆயுதமணிந்த வீரர்கள் அவர்களை மிகவும் கவனமாகக் காத்துக் கொண்டிருந்தனர்.

தேவன் எல்லாவற்றையும் ஆளுகிறவர்

ராபர்ட் ஜாஃப்றே படுத்திருந் தாலும் தூங்கவில்லை. பகலில் நடந்த சம்பவங்கள் அவர் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தன. இதன் முடிவு என்ன என்று அவர் ஆச்சரியமடைந்தார். சூழல் மிகவும் மோசமாகவே இருந்தது. எனி னும் இது எதிர்பாராத நிகழ்வு அல்ல, தேவனுக்கு ஒரு திட்டம் இருக்கும் என தம்மைத் தேற்றிக் கொண்டார். பின்பு தேவனுக்காக ஒரு நல்ல போர்ச் சேவ கனாகப் பணி புரியலாம் என்று எண் ணிக்கொண்டார். தப்பி ஓடும் எண்ணம் இதுவரை ஏற்படவில்லை. ஆனால் தனது பணி, தன்னை சுற்றிலும் படுத் திருந்த அஞ்சா நெஞ்சம் படைத்த கொள்ளையர், தனது மனைவி, மகள் மார்கரேட், தனது இல்லம் என்று எண்ணங்கள் அலைந்தன.12 ஆண்டுகள் வாழ்ந்த வுச்செளவிலுள்ள வீடு, உழைத்த உழைப்புகள், க்வெய்லின் மிஷனெரிகள் அனைவரும் சிந்தனை யில் வந்தனர். க்வெய்லின் மிஷனெரி களுக்காகவே இந்த ஆபத்தான பிரயா ணத்தை அவர் மேற்கொண்டார். இப் போது அவர்கள்தான் இவரைக் காப்பாற்ற வேண்டும். ஆயினும் தேவன் எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவர். இந்த இடத்தை விட்டு உயிரோடு வருவேன் என்ற எண்ணம் வந்தது. ஆனால் அந்த அடர்ந்த காட்டில் அவர் நேசித்த முகங்களைப் பார்க்கு முன் அவருக்கு என்ன நடக்க இருக்கிறது என் பதை இந்த வீர நெஞ்சம் படைத்த மிஷ னெரி அறியவில்லை.

(தொடரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பலிபீடத்துக்கு முன்னே படைக்க வேண்டும். அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; . . . . அது எனக்கு இடப்படும் தகனங்களில் **நான் அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய பங்கு** லேவி.6:14-17.

உங்கள் சமாதான பலிகளில் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக. ஆரோனுடைய குமாரரில், சமாதான பலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு, வலதுமுன்னந் தொடை **பங்காகச்** சேரும் லேவி.7:32,33.

இதைக் குறித்து வேத புத்தகத்தில் எழுதப்பட்ட மிகவும் அழகான ஒரு சம்பவத்தை மிகவும் சுருக்கமாக கீழே எழுதுகிறேன்:

சவுல் வர ஒரு நாளுக்கு முன்னே கர்த்தர் சாமுவேலின் காது கேட்க: நாளை இந்நேரத்திற்குப் பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணக் கடவாய் என்றார்.

பின்பு சாமுவேல் சமையற்காரனைப் பார்த்து: நான் உன் கையிலே ஒரு **பங்கைக்** கொடுத்து வைத்தேனே, அதைக் கொண்டு வந்து வை என்றான்.

அப்பொழுது சமையற்காரன், ஒரு **முன்னந்தொடையையும்,** அதனோடிருந்ததையும், எடுத்துக் கொண்டு வந்து, அதை சவுலுக்கு முன் வைத்தான்; அப்பொழுது சாமுவேல்: இதோ, இது உனக்கென்று வைக்கப்பட்டது, இதை உனக்கு முன்பாக வைத்துச் சாப்பிடு. . . என்றான். . . .

அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை முத்தஞ் செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா? என்றான் 1சாமுவேல் 9:15- 10:1வரை.

கர்த்தர் தம்மாலே அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியர்களுக்கும், லேவியருக்கும், இராஜாக்களுக்கும் அநாதி சிநேகத்தினால் அவர் அளிக்கும் **பங்காக** இவைகள் இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் இவ்வாறு எழுதப்படவில்லையா?

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென் வெளி.1:6.

இவ்விதமாக தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஆசாரிய ஊழியத்தை அவமாக்கி அழிந்துபோன ஒரு துயர சம்பவத்தை கீழே எழுதுகிறேன்:

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; . . . ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூறுள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்து வந்து,

அதினாலே, கொப்பறையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக் கொள்வான்;

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். . . . அவர்களைச் சங்கரிக்க கர்த்தர் சித்தமாயிருந்தார் 1சாமு.2:12-25.

2. இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கும் உலக மக்கள்

மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும்; அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்; அவர்கள் புத்திர பாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். சங்.17:14.

துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள் மேல் பொறாமை கொண்டேன். மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்; மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.

ஆகையால் பெருமை சரப்பணியைப் போல் அவர்களைச் சுற்றிக் கொள்ளும், கொடுமை ஆடையைப் போல் அவர்களை மூடிக் கொள்ளும் சங்.73:3-6.

3. தன்னை விட்டுடுபடாத நல்ல பங்கு

இதைக் குறித்து மூன்று முக்கிய குறிப்புகளை மாத்திரம் எழுதுகிறேன்.

1. மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தாள். நம்மில் சிலர் மார்த்தாளைப் போல பற்பல காரியங்களைக் குறித்து வருத்தமடையவில்லையா? அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்கவில்லையா? லூக்கா 10:40,41.

2. மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் லூக்கா 10:39.

ஒரு பத்திரிகையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: **ஒரு கணவன் "நான் என் ஆசை மனைவியுடன் தினந்தோறும் அன்புடன் பேச ஒரு 15 நிமிடங்களாவது ஒதுக்கி வைத்துக் கொள்வேன்" என்று சொல்லுகிறதில்லை!** நாமும் கூட ஆண்டவருக்கென்று கொஞ்சம் சமயம் ஒதுக்கவில்லையா? கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன்/மனுஷி/ பாக்கியவான்/பாக்கியவாட்டி (சங்.1:2) என்றல்லவோ தேவனுடைய வசனம் கூறுகிறது!

3. தேவையானது ஒன்றே, அது நம்மை விட்டெடுபடாத நல்லபங்கு 10:42.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இந்த உலக வாழ்க்கை மிகவும் குறுகினது, அதுவும் சீக்கிரம் கடந்து போகும். "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணின வைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருயத்தில் தோன்றவுமில்லை" 1கொரி.2:9.

"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" 2கொரி.5:1.

உலக வாழ்க்கை குறுகியதே
சீக்கிரம் கடந்திடும்
உலக மீட்பர் இயேசுவின்
வருகை சமீபமே
தேசம் அழியுது பார்
இயேசு வரப் போகிறார்

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலக மொபைல் : 95432 21008
: 94897 40295
அலுவலக போன் : 04652 403295

10.00 - 1.00; 2.00 - 6.00

ஒரு சாட்சி

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் அட்லாண்டாவிலிருந்து சின்சினாட்டி என்ற இடத்திற்கு விமானத்தில் சென்றபோது எனக்கு அருகில் உட்கார்ந்திருந்த பெண் மிகுந்த கவலையுடனிருப்பதைக் கவனித்தேன். அவளிடம் பேசினபோது அவளது வாழ்வு முடிந்து போவதாகக் குறிப்பிட்டாள். அவளது கேடான தெரிந்துகொள்ளுதலால் திருமண வாழ்வு முடிந்து போவதாயிருந்தது.

எனவே எதிர்காலமே இல்லை என்று எண்ணினாள். அவளோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டு தேவனுடைய வாக்குத்தத் தங்களை எடுத்துக் கூறினேன். அவளில் சிறிய மாற்றம் ஏற்பட்டதை கவனித்தேன்.

விமானம் தரையிறங்கியதும் நான் விடை பெற்றுக்கொண்டு என் பொருட்களை (Luggage) எடுக்குமிடத்திற்குச் சென்றேன்; அப்பொழுது அவள் திடீரென என்னிடம் நீங்கள் இயேசுவா? என்று கேட்டாள். ஒரு வினாடி திகைத்து நின்றேன். இறுதியாக நான் இயேசு அல்ல, ஆனால் அவரை அறிவேன், எல்லா மக்களைப் போல எனக்கும் அவர் தேவை என்றேன்.

இயேசுவைப்போல ஜெபிப்போம்!
இயேசுவைப்போல ஜீவிப்போம்!

நற்பயனளிக்கும் மன்றாட்டு ஜெபம்

Effectual, intercessary Prayer

Oswald J. Smith

ஜெபிக்கிற உண்மை நிலையில் நின்றால் மட்டுமே பயனளிக்கும் ஜெபத்தை ஏறெடுக்க முடியும். நமக்கும் தேவனுக்கு மிடையிலுள்ள உறவு சரியாயிருக்க வேண்டும். 'என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்' சங்.66:18. ஜெபநிலை என்பது பாவங்களைத் தள்ளி விட்டு, தூய ஆவியான வரை துக்கப்படுத்தி நம்மைத் தூரப் படுத்துவதான தேவனுக்குப் பிரியமற்ற யாவையும் விலக்குவதாகும்.

நம்மையும், நமது தேவைகள் பிரச்சனைகள் ஆகியவற்றை விட்டு விட்டு, இந்த ஆசீர்வாதமான ஊழியத்திற்காக ஆண்டவராகிய இயேசுவுடன் ஆவிக்குரிய நிலையில் பிரவேசிக்க வேண்டும். பிறருடைய பாரங்கள், உத்தம ஆத்தும பாரத்தோடு எடுத்துச் செல்லப்பட வேண்டும். தேவ சித்தத்தின்படி தூய ஆவியானவர் ஜெபிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

மோசே, பவுல் ஆகியோர் பிறருக்காகவே ஜெபித்தனர். நமது ஆண்டவர் ஒருபோதும் தனக்காக ஜெபிக்கவில்லை. அவரைச் சுற்றிலும் நெருங்கி வந்தவர்களுக்காக அவர் மன்றாடி ஜெபித்தார்.

எனவே நாம் நம்மை ஆண்டவராகிய இயேசுவின் அருகில் கொண்டு வந்து, அவரது இருதய பாரத்தை உணர்ந்து, அதற்கான அவரது திட்டம் என்ன என்பதை அறிந்து அதை மனதில் வைத்து ஜெபிக்க வேண்டும். ஆனால் மாறாக நமது பாரம் முழுவதும் நம்மை சுற்றியே இருக்கிறது.

முதலாவது நம்மைக் குறித்த கரிசனைகளை விட்டுவிட்டு பிறருக்காக ஜெபிக்க வேண்டும். அவரது திட்டத்தையும், அதை நிறைவேற்றி எவ்வளவாக அவரை மகிமைப்படுத்தலாமென்றும் சிந்திக்க வேண்டும். எனவே அவர் தமது பாரத்தை வெளிப்படுத்துமட்டும் காத்திருந்து பின்பு இயேசுவோடு இணைந்து ஜெபித்து செயல்படுவோம்.

தூய ஆவியானவர் ஒருவரே தேவனுடைய மனதை அறியக்கூடியவர். அவருக்கு நம்மை அர்ப்பணிக்கும் போது அவர் நம்மை வழி நடத்தி, பிரகாசிப்பதால் நாம் செய்யும் விண்ணப்பங்கள் குறி தவறுவதில்லை. நாம் அவர்மீது முற்றிலும் சார்ந்து கொண்டால் போதும். கிறிஸ்துவோடு ஜெபிப்பது எத்தனை மகிழ்ச்சியானது! நமக்காக ஜெபிப்பதை விட இது முற்றிலும் வேறுபட்டது.

ooooooo

பத்திரிகை செய்திகள்

கன்னியாகுமரி, விருதுநகர் உள்பட

11 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்கள் தொடங்க முடிவு

சென்னை ஜூன் 20 –

தமிழகத்தில் கன்னியாகுமரி, விருதுநகர் உள்பட 11 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்கள் தொடங்கப்படும் என்று பாஸ்போர்ட் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாஸ்போர்ட் சேவா மையங்கள்

சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது, நாட்டின் அனைத்து பகுதியில் உள்ளவர்களுக்கும் பாஸ்போர்ட் விரைவில் கிடைக்க வேண்டும் என்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் தபால் துறை ஆகியவை இணைந்து தலைமை தபால் நிலையங்கள் மற்றும் தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்களை தொடங்கி வருகின்றன.

அதன்படி முதல் கட்டமாக நாடு முழுவதும் 86 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்கள் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது. அதில் 52 தபால் நிலையங்களில் இந்த வசதி ஏற்கெனவே பயன்பாட்டுக்கு வந்து விட்டன. மீதம் உள்ள 34 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

11 தபால் நிலையங்களில் . . . .

இதற்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதால், நாடு முழுவதும் மேலும் 149 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்களை தொடங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன்படி தமிழகத்தை பொறுத்தமட்டில் கடலூர், திண்டுக்கல், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர், விழுப்புரம், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள தலைமை தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் சேவா மையங்கள் தொடங்கப்பட உள்ளது. காரைக்காலிலும் இந்த வசதி தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் மொத்தம் 235 தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் தொடர்பான சேவை கிடைக்க உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தபால் நிலையங்களில்

நாளை முதல் ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்து கொள்ளலாம் தபால் துறை அறிவிப்பு

சென்னை, ஜூலை.2–

தமிழ்நாடு அஞ்சல் வட்ட தபால்துறை தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:– இந்திய அரசால் வழங்கப்பட்ட ஆதார் அட்டையில் உள்ள விவரங்களை மேம்படுத்துவதற்கான வசதியினை தபால் நிலையங்கள் மூலம் நடைமுறைப்படுத்த தபால் துறை மற்றும் இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்துடன் (உடாய்) ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையில் உள்ள சென்னை தலைமை தபால் நிலையம், அண்ணாசாலை, தியாகராயநகர், மயிலாப்பூர், பரங்கிமலை, பூங்கா நகர், ஆகிய இடங்களில் உள்ள தலைமை தபால் நிலையங்கள், தேனாம்பேட்டை, அண்ணா நகர், அசோக்நகர், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் உள்ள துணை தபால் நிலையங்களிலும் 3–ந் தேதி (நாளை) முதல் இந்த வசதி தொடங்கி வைக்கப்பட உள்ளது.

பொதுமக்கள் தங்கள் ஆதார் அட்டையில் உள்ள விவரங்களை மேம்படுத்துவதற்கு இந்த தபால் நிலையங்களை அணுகலாம். பின்னர் இந்த பணி படிப்படியாக தமிழகத்தில் உள்ள 2 ஆயிரத்து 551 தபால் நிலையங்களில் அறிமுகப்படுத்தப் படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தபால் துறை சார்பில்

கடிதம் எழுதும் போட்டி அடுத்த மாதம் 8–ந் தேதி நடக்கிறது

நாகர்கோவில், ஜூலை.15

கன்னியாகுமரி கோட்ட தபால்துறை முது நிலை கண்காணிப்பாளர் (பொறுப்பு) ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

இந்திய தபால் துறை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ– மாணவிகள், பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் தேசிய அளவிலான கடிதம் எழுதும் போட்டி நடத்த உள்ளது. இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. "அன்புள்ள தேசப்பிதா காந்தி, நீங்கள் என்னை கவர்ந்தவர்" என்ற தலைப்பில் தமிழ், ஆங்கிலம், இந்தி மொழியில் எழுத வேண்டும்.

18 வயதிற்கு உட்பட்டோர், 18 வயதிற்கு மேற்பட்டோர் என 2 பிரிவுகளாக போட்டி நடக்கும். தேசிய அளவில் முதலிடம்,2–ம் மற்றும் 3–ம் இடம் பெறுபவர்களுக்கு முறையே ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம், ரூ.10 ஆயிரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். மாநில அளவில் முதலிடம் பிடிப்பவருக்கு ரூ.25 ஆயிரமும், 2–ம் இடம் பிடிப்பவருக்கு ரூ.10 ஆயிரமும், 3–ம் இடம் பிடிப்பவருக்கு ரூ.5 ஆயிரமும் பரிசு வழங்கப்படும். குமரி மாவட்டத்தில் இந்த போட்டி நாகர்கோவில் மற்றும் தக்கலை தலைமை தபால் நிலையத்தில் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 8–ந் தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை நடைபெற உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To